DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

Judicial Magistrate Court At Oddanchatram

| Case Type | No | Year | |
|---|---|---|---|
| CC | 140 | 2017 | |
| சா.ப. எண் | அ.த.சா. எண் | சாட்சியின் பெயர்: | வயது |
| LW | PW3 | பொன்னுச்சாமி | |
| க/பெ/தந்தையின் பெயர் | | பழனிச்சாமி | |
| முகவரி: | | | |
| Religion / Caste : | | *HINDU/CRISTIAN/MUSLIM/OC/ BC/MBC/ SC/ST* | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 23/02/2021

அரசு தரப்பில் முதல் விசாரணை

நான் ஜக்கம்பட்டியில் குடியிருந்து ஜவுளிக்கடை துணி வியாபாரம் செய்து வருகிறேன். புகார்தாரர் கருப்பத்தாள் என்னுடைய அம்மா ஆவார். எனது தாயார் கந்தசாமி கவுண்டர் வகையறாவிற்கு எதிராக புகார் கொடுத்த விவரம் தெரியும். கடந்த 17.05.2016 ம் தேதி ஜக்கம்பட்டியில் உள்ள எனது அப்பா வீட்டினை இடிக்க எதிரிகள் வந்தார்கள்.அப்போது நாங்கள் சென்னையில் இருந்தோம் எனது அம்மா கருப்பாத்தாள் ஜக்கம்பட்டியில் இருந்தார் மேற்படி வீட்டினை இடிக்க சென்ற போது எனது அம்மா எதிரிகளை தடுக்க சென்றுள்ளார். எதிரிகள் கத்தி, கோடாரி ஆகிய ஆயுதங்களுடன் வந்து எனது அம்மாவை மிரட்டியுள்ளார்கள். மீண்டும் எனது அம்மா அவர்களை வீட்டை இடிக்க கூடாது என்று சொல்லிதடுக்க கம்பால் எனது அம்மாவின் காலில் அடித்துவிட்டார்கள். எதிரிகள் அடித்ததில் எனது அம்மா மயங்கி கிறங்கி கீழே விழுந்துவிட்டார் அதன்பிறகு சென்னையில் இருந்த எங்களுக்கு போன் மூலமாக சொன்னார்.அதன்பிறகு அக்கம்பக்கத்தில் உள்ளவர்களிடம் சொல்லி போலீசாருக்கு தகவல் கொடுத்து சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு சேர்ந்துள்ளார் தகவல் கிடைத்து நாங்கள் சென்னையிலிருந்து வந்தோம்.போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>எதிரிகள்  தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

வீடானது யாருடைய பெயரில் உள்ளது என்றால் எனது அப்பா பெயரில் உள்ளது. வீடானது எனது  அப்பாவிற்கு சொந்தம் என்றும், மேற்படி வீடு குறித்து எதிரிகள் காவல்நிலையத்தில் புகார் கொடுப்பதற்கு முன்பாக நாங்கள் தான் போலீஸில் புகார்கொடுத்துவிட்டோம் என்றால் சரியல்ல. நான் எனது  தாயார்சொல்வதுபோன்று எந்தவொரு சம்பவமும் நடக்கவில்லை என்றால் சரியல்ல.

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

(sd) Ponusamy
Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

(sd) R.Pandy
Judicial Magistrate
Oddanchatram.
Date :  23/02/2021

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

Judicial Magistrate Court At Oddanchatram

| Case Type | No | Year | |
|---|---|---|---|
| CC | 140 | 2017 | |
| சா.ப. எண் | அ.த.சா. எண் | சாட்சியின் பெயர்: | வயது |
| LW | PW4 | பொன்னுத்தாள் | |
| க/பெ/தந்தையின் பெயர் | | கருப்புச்சாமி | |
| முகவரி: | | | |
| Religion / Caste : | | *HINDU/CRISTIAN/MUSLIM/OC/ BC/MBC/ SC/ST* | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 23/02/2021

அரசு தரப்பில் முதல் விசாரணை

நான் ஜக்கம்பட்டியில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். புகார்தாரர் கருப்பாத்தாள் எனது அம்மா ஆவார். ஜக்கம்பட்டியில் எனது அம்மா அப்பா பெயரில் வீடு ஒன்று உள்ளது.மேற்படி வீட்டினை எனது அப்பா பழனிச்சாமி கவுண்டர் அவருடைய தம்பியான கந்தசாமி கவுண்டருக்கு எழுதி கொடுத்துவிட்டார் இது சம்பந்தமாக நாங்கள் நீதிமன்றத்தில் வழக்கு போட்டுள்ளோம் வழக்கு நிலுவையில் இருக்கும்போதே மேற்படி வீட்டினை இடிப்பதற்காக 1 முதல் 7 வரையிலான எதிரிகள் வந்துள்ளார்கள் அவர்களிடம் எனது அம்மா கருப்பாத்தாள் நீதிமன்றத்தில் வழக்கு உள்ள போது இடிக்கக்கூடாது என்று சொல்லி தடுத்துள்ளார் எதிரிகள் எனது அம்மாவை அடித்துவிட்டார்கள். மேற்படி எனது தாயாரை அடித்த தகவலை அக்கம்பக்கத்தில இருந்தவர்களும்எனது தாயாரும் போன் மூலமாக சென்னையில் இருந்த எங்களுக்கு தகவல் சொன்னார்கள் நாங்கள் அங்கிருந்து கிழம்பி வந்தோம் எங்களது தாயாரை அரசுமருத்துவமனையில் சேர்த்து இருந்தார்கள்.

எதிரிகள்  தரப்பில் குறுக்கு விசாரணை-

சம்பவத்திற்கு முன்பு எங்களது அப்பாவுடன் பேச்சுவார்த்தை இருந்ததா? இல்லையா? என்றால் பேச்சுவார்த்தை இருந்தது. என்னுடைய அப்பாவை நாங்கள் சரியாக உணவு அளித்து கவனிக்காததால் தான் அவர் தன்னுடைய சுயசம்பாத்திய சொத்தை அவருடைய தம்பிக்கு எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. நாங்கள் எனது அப்பாவோடு பிரச்சனை செய்தோம் என்றும் அதை தெரிந்த எதிரிகள் எங்கள் மீது புகார் கொடுக்க சென்றார்கள் என்றும், அதற்கு முன்பாகவே எதிரிகள் மீது புகார்கொடுத்துவிட்டோம் என்றால் சரியல்ல. நாங்கள் சொல்வது போன்று சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

(sd) Ponuthal
Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

(sd) R.Pandy
Judicial Magistrate
Oddanchatram.
Date : 23/02/2021